செ.வெ.எண்-08 நாள்-02.09.2021

# பத்திரிக்கைச் செய்தி.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் 29 நபர்களுக்கும், காது கேளாத மாற்றுத்திறனாளிக்கு 14 நபர்களுக்கும் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளின் தாய்க்கு 05 நபர்கள் ஆக மொத்தம் 48 மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லா மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் ரூ.2,53,776/- (இரண்டு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து எழுநூற்றி எழுபத்தி ஆறு மட்டும்) மதிப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.சீனிவாசன், முடநீக்கியல் வல்லுநர் திரு.ராமன், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் திரு.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்த கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**